# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பண்ருட்டி.

## முதலேற்பு வழக்கு எண்.3/2015

2024 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 31ம் நாள் புதன்கிழமை வாதி பரந்தாமன் வா.சா.1 – ன் முதன்மை பிரமாண வாக்குமூலம்.

1969 ம் ஆண்டு 44 வது பிரமாண சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திருமதி. எம். ஆர்த்தி, எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவர்கள் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பரந்தாமன் | ஜாதி | : |
| தந்தை பெயர் | : சின்னதம்பி | சமயம் | : இந்து |
| கிராமம் | :எனதிரிமங்கலம் | வயது | :67 |
| தாலூக்கா | : பண்ருட்டி | தொழில் | : விவசாயம் |

### முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என உறுதியளிக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ. 8 வரை குறியீடு செய்ய கேட்டுக்கொள்கிறேன். வாதியின் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அவரது முதன்மை விசாரணை சாட்சியமாக பதிவு செய்யப்படுகிறது.

### சான்றாவணங்கள்

வா.சா.ஆ.1 05.02.2007 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்டநகல்.

வா.சா.ஆ.2 24.11.2014 ம் தேதியிட்ட எனதிரிமங்கலம் கிராம சர்வே எண்கள் 88/2, 88/9 ன் பட்டா ஆவணம்.

வா.சா.ஆ.3 24.11.2014 ம் தேதியிட்ட எனதிரிமங்கலம் கிராம சர்வே எண் 88/9 ன் அ பதிவேடு .

வா.சா.ஆ.4 28.10.1982 ம் தேதியிட்ட கருப்பகவுண்டர் பெயரிலான அடங்கல் ஆவணம் (மேற்படி ஆவணம் கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டுள்ளதால் ஏற்புடையதல்ல என பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆட்சேபனை செய்தார் அது குறித்து தீர்ப்புரையின் போது தீர்மானிக்கப்படும்)

வா.சா.ஆ.5 18.12.2014 ம் தேதியிட்ட சர்வே எண் 88/9 தொடர்பான வரைபடம் ஆவணம்.

வா.சா.ஆ.6 13.08.2007 ம் தேதியிட்ட வாதி தாவா சொத்து தொடர்பான ஆவணத்தை அடமானம் வைத்து வைப்பீடு செய்ததற்கான ஆவணம் அசல்.

வா.சா.ஆ.7 12.03.2018 ம் தேதியில் வாதி அடமானம் பைசல் செய்ததற்கான ஆவணம் அசல்.

வா.சா.ஆ.8 கருப்பகவுண்டர் மகன் சின்னதம்பி பெயரிலான ஒப்படைவு ஆவணம்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.